1982 பிப்ரவரி 4]

கொருக்கை கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 40—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் கொருக்கை கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) ஆம்.

(ஆ) ரூ. 3·79 இலட்சம் செலவில் திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள கொருக்கை கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம், 1981–82-ம் பிரிவுத் திட்டங்களின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டு, அமுலாக்கப்பட்டு வருகின்றது.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் கால்நடைகள் எண்ணிக்கையில் எந்த அளவுக்கு அதிகரித்திருக்கின்றது அல்லது கால்நடைகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருக்கின்றதா?

[முற்பகல் 10·00]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலநடைகளின் எண்ணிக்கை விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]